**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

அசல் வழக்கு எண்.641/2019 எச்.எம்.ஓ.பி.எண்.
எஸ்.சி.ஓ.பி.எண். நி.வே.ம.எண்.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **பி.வா.சா.3**-ன் வாக்குமூலம் 1989-ம் ஆண்டு 19-வது விதி ஏற்பாட்டின் படி திருமதி.K.P.இளவரசி, முதன்மை சார்பு நீதிபதி, ஈரோடு அவர்களால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ் | வட்டம் | : | |
| த/பெ | : | மூர்த்தி | மாவட்டம் | : | |
| க/பெ | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |

**பி.வா.சா.3 : முதல் விசாரணை**:-

நான் கார்பென்டர் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்னேன். அதில் கூறியுள்ள விபரங்கள் தெரிந்து கொண்டேன். நிலக்கதவு ஆகியவை கரையான் இருந்தது, சரிசெய்து கொடுத்தேன். ஷோ கேஸ், கபோர்டு புதிதாக செய்துக் கொடுத்தேன். நான் வேலை செய்த வீடு ஷேக்அலாவுதீன் என்பவருக்கு சொந்தமான வீடு ஆகும். மேற்படி வீட்டின் பேரில் தான் தாவா நடைபெறுகிறது என்ற விபரத்தை தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். மேற்படி தாவா வீட்டில் பராமரிப்பு பணிகள் செய்ததை யாராவது ஆட்சேபணை செய்தார்களா என்றால், இல்லை. மேற்படி வீட்டை பராமரிப்பு செய்வதற்கு கூலி ரூ.4 லட்சமும் மற்றும் பராமரிப்பு பணிக்கான பொருட்கள் ரூ.7 லட்சமும் செலவானது. அந்த செலவுகள் அனைத்தும் யாரால் செய்யப்பட்டது என்றால், ஷேக் அலாவுதீன் என்பவரால் செலவு செய்யப்பட்டது.

**பி.வா.சா.3 : வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பராமரிப்பு வேலை செய்த வீட்டின் கதவு எண்.28, குப்பக்காத்தான் வீதி, மரப்பாலம், ஈரோடு ஆகும். நான் ஈரோடு கூட்டுறவு தச்சு தொழிலாளர் சங்கத்தில் நான் உறுப்பினரா என்றால், இல்லை. நான் தச்சு தொழில் செய்வதற்கான எழுத்து பூர்வமான ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால், இல்லை. நான் வேலைசெய்த வீட்டின் உரிமையாளர் யார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால், தெரியும், ஷேக் அலாவுதீன் ஆவார். அவரது வீட்டின் கிரையப் பத்திரம் பார்த்தேனா என்றால், இல்லை. தாவா சொத்திற்கு ஷேக் அலாவுதீன் உரிமையாளர் என்பதற்கு நான் பத்திரத்தை பார்த்தேனா என்றால், இல்லை. அலாவுதீன் உடன் பிறந்தவர் ஒரு தம்பி உள்ளார். ஷேக் அலாவுதீன் உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் பெயர் எனக்கு தெரியாது என்றால், அவரது தம்பி பெயர் சிராஜுதீன். தாவா வீட்டில் ஷேக் அலாவுதீன் மட்டும் தான் குடியிருந்தார். ஷேக் அலாவுதீன் சகோதர, சகோதரிகளை நேரில் பார்த்து, வீட்டை பராமரிப்பு செய்வதற்கு முன் அனுமதி பெற்றேனா என்றால், அவர்களை நான் பார்த்ததில்லை. ஷேக் அலாவுதீன் சகோதர, சகோதரிகள் யாரும் என்னை வேலை செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. ஷேக் அலாவுதீன் மட்டும் தான் வீட்டின் பராமரிப்பு பணியை செய்யும்படி கூறினார். தாவா சொத்தின் உரிமையாளர் யார் என்று தெரியாமல், வீட்டில் பராமரிப்பு பணி எப்படி செய்தேன் என்றால், ஷேக் அலாவுதீன் தான் தான் வீட்டின் உரிமையாளர் என கூறி பராமரிப்பு பணியை செய்ய சொன்னார். கட்டிடத்தில் எந்தெந்த அறையில், என்ன பொருட்கள், யார் யாருடைய பொருட்கள் இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் பராமரிப்பு செய்த வீட்டில் மொத்தம் நான்கு அறைகள், ஒரு ஹால் இருந்தது. நான் பராமரிப்பு பணிகள் செய்ததற்கு கணக்கு எழுதி வைத்துள்ளேனா என்றால், இல்லை. நான் தச்சு தொழிலாளியே இல்லை என்றாலும்,

ஷேக் அலாவுதீன் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. பராமரிப்பு பணி செய்வதற்கான பொருட்கள் வாங்கியதற்கு கணக்கு வைத்துள்ளேனா என்றால், குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் ஷேக் அலாவுதீனுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்வதால், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சியம் இல்லை என்று சொன்னால், சரியல்ல.